DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 3/2022 |
| Deposition of Witness for | : | P.W. 7 |
| Name | : | **தங்கசாமி** |
| Father's Name | : | **தீர்த்தம்** |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் எதிரி ஆஜர். )**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 12.03.2026

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது கலியாந்துாரில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். எனக்கு அ.சா.1 தினேஷ்வரன், அ.சா.1 சேங்கை சாமியை தெரியும் பங்காளி முறையாகும். அ.சா.4 திவாகர் எது மகன் ஆவார். சாட்சி ஆதி நாராயணன் மற்றும் ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 17.07.2021ம் தேதி திருப்புவனம் போலிசார் மதியம் 1.30 மணியளவில் கலியாந்துாரில் உள்ள ஊரணிக்கரைக்கு வழக்கு சம்மந்தமாக விசாரிப்பதற்கு வந்தார்கள். போலிசார் அந்த இடத்தை பார்த்து வரைபடம் வரைந்தார்கள். நானும் ஆதிநாராயணனும் அந்த வழியாக வந்தபோது போலிசார் எங்களை நிறுத்தி இடத்தை பார்த்தற்காக கையொப்பம் போடும்படி சொன்னார்கள். நானும் ஆதிநாராயணனும் கையொப்பம் செய்தோம்.

2. பார்வை மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். **பார்வை மகஜர் அ.த.சா.ஆ.2** ஆகும். பின்பு போலிசார் சம்பவயிடத்திலிருந்து ரத்தம் பட்ட மண், ரத்தம் படாத மண் எடுத்து எங்களிடம் சாட்சி கையொப்பம் கேட்டார்கள். நானும் ஆதிநாராயணனும் கையொப்பம் செய்து கொடுத்தோம். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள தங்கசாமி என்ற முதல் கையொப்பம் என்னுடையதுதான். **கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ.3** ஆகும். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**: வாய்ப்பளித்தும் இல்லை

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.03.12 17:48:15 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர் ,**

**சிவகங்கை.**